**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர் ,நாள்.27.02.2023**

**2023**ம் ஆண்டு ஜனவரி மாதம் **27.02.2023**ம் தேதி திங்கட்கிழமை மாலை **4.30** மணிக்கு நடைபெற்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

❖ **பொருள் எண்–1:**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் (ந.க.எண்–37307/2022/SBM,நாள்–10.02.202) தூய்மை இந்தியா திட்டம் **2.0**ன் கீழ் ODF+ மற்றும் GFC சான்றிதழ் பெற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக PMU அவர்களின் **22.02.2023**ம் தேதிய நேரடி ஆய்வு அறிவுரைகளின் படி, கீழ்காணும் **3** சமுதாய கழிப்பிடத்தை சீர் அமைத்து ,பழுதான பொருட்களை சரிசெய்வதற்கான **உத்தேச செலவினம் ரூ.**15.50/– **இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.

| வ.எண் | சீரமைக்கப்படும் சமுதாய கழிப்பிடங்கள் |
|---|---|
| 1 | பெரியாண்டவர் ஹைரோடு ஆடுவதை கூடம் சமுதாய கழிப்பிடம் |
| 2 | அம்மாகுளம் 1 வது தெரு சமுதாய கழிப்பிடம் |
| 3 | புதுகாலணி 4 வது தெரு சமுதாய கழிப்பிடம் |

**அலுவலகக்குறிப்பு** :– **அனுமதிக்கலாம்**
**(ந.க.எண்.** 0717/2023/**இ**1)
**தீர்மான எண் : 249 –** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்–2 :**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தில் (ந.க.எண்–37307/2022/SBM,நாள்–10.02.202) தூய்மை இந்தியா திட்டம் **2.0**ன் கீழ் ODF+ மற்றும் GFC சான்றிதழ் பெற தேவையான நடவடிக்கை மேற்கொள்ளவதற்காக நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக PMU அவர்களின் **22.02.2023**ம் தேதிய நேரடி ஆய்வு அறிவுரைகளின் படி, கீழ்காணும் **4** சமுதாய கழிப்பிடத்தை சீர் அமைத்து ,பழுதான பொருட்களை சரிசெய்வதற்கான **உத்தேச செலவினம் ரூ.**15.50/– **இலட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது**.

| வ.எண் | சீரமைக்கப்படும் சமுதாய கழிப்பிடங்கள் |
|---|---|
| 1 | கீழவெளி வீதி சமுதாய கழிப்பிடம் |
| 2 | எஸ்.எஸ் புரம் சமுதாய கழிப்பிடம் |
| 3 | பெரியாண்டவர் ஹைரோடு சமுதாய கழிப்பிடம் (பழைய பேருந்து நிலையம்) |
| 4 | ஒழுகால் பாதை தெரு சமுதாய கழிப்பிடம் |

**அலுவலகக்குறிப்பு :– அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.** 0718/2023/**இ**1)

**தீர்மான எண் : 250 –** அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்–3:**

இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2.0 கீழ் odf + மற்றும் GFC சான்றிதழ் பெறுவதற்கும் தூய்மை நகரங்களுக்கான போட்டியில் ( Swachh Surekshan 2023) கூடுதல் மதிப்பெண்கள் பெறுவதற்கும் நகரின் வணிகப்பகுதிகளில் இரட்டை குப்பைத்தொட்டிகளை (Twin Bin) வைத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் காமராஜர் பஜார் , PH ரோடு , பாளையம் ரோடு , பரமசிவன் கோவில் ரோடு ஆகிய வணிகப்பகுதிகிளில் 50 இடங்களில் வைத்திட மன்ற அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 /- இலட்சம் நகராட்சி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :– அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.** 0605/2023/எச்1)

**தீர்மான எண் : 251 –** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்–4:**

போடிநாயக்கனூர் நகராட்சியில் நூற்றாண்டு நிறைவு திட்டம் **2020–21**ன் கீழ் பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கம் மேல்தளத்தில் **14** கடைகளும்,**1** உணவு விடுதி (அ) கூடம் மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ளே தரை தளத்தில் **11** கடைகளும், முதல் தளத்தில் **11** கடைகளும் மொத்தம் **36** கடைகள் மற்றும் **1** உணவு விடுதி (அ) கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை அரசாணை நிலை எண்.**181** நாள்.**19.09.2008**ன் படி மேற்காண் **36** கடைகள் மற்றும் **1** உணவு விடுதி (அ) கூடத்தை பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி மாத வாடகை அடிப்படையில் ஏலம் விடுவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேற்காண் பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை விளம்பரம் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.**2,00,000/–** னை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**702/2023/**அ**2)**

**தீர்மான எண் : 252 –** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்–5:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் நூற்றாண்டு நிறைவு திட்டம் 2020–21ன் கீழ் பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கம் மேல்தளத்தில் 14 கடைகளும்,1 உணவு விடுதி (அ) கூடம் மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ளே தரை தளத்தில் 11 கடைகளும், முதல் தளத்தில் 11 கடைகளும் மொத்தம் 36 கடைகள் மற்றும் 1 உணவு விடுதி (அ) கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.181 நாள்.19.09.2008ன் படி மேற்காண் 36 கடைகள் மற்றும் 1 உணவு விடுதி (அ) கூடத்தை பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரி மாத வாடகை அடிப்படையில் ஏலம் விடுவதற்கு கீழ்கண்ட விபரப்படி பொறுப்பு தொகை மற்றும் மின்சார கட்டண வைப்புத்தொகை நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி விடப்படும் இனங்களின் விபரம் | பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி பொறுப்புத் தொகை | மின்சார கட்டண வைப்புத்தொகை | குத்தகை உரிமம் காலம் |
|---|---|---|---|---|
| 1. | பேருந்து நிலையத்தில் வடக்கு பக்கம் மேல்தளத்தில் கட்டப்பட்டுள்ள (14 கடைகள்) கடை ஒன்றுக்கு | 75,000/– | 2000/– | ஒப்படைக்கும் நாள் முதல் 9 ஆண்டுகள் வரை (3ஆண்டுக்கு ஒரு முறை ஏலக்கேட்புத் தொகையில் 15சதவீதம் உயர்வு |
| 2, | பேருந்து நிலையத்தில் வடக்குபக்கம் கட்டப்பட்டுள்ள உணவு விடுதி (அ) கூடம் | 3,00,000/– | 5,000/– | ஒப்படைக்கும் நாள் முதல் 9 ஆண்டுகள் வரை (3ஆண்டுக்கு ஒரு முறை ஏலக்கேட்புத் தொகையில் 15சதவீதம் உயர்வு |
| 3 | பேருந்து நிலையத்தில் மேற்கு புறத்தில் தரை தளத்தில் கட்டப்பட்டுள்ள அளவுள்ள (11 கடைகள்) கடை ஒன்றுக்கு | 1,50,000/– | 2000/– | ஒப்படைக்கும் நாள் முதல் 9 ஆண்டுகள் வரை (3ஆண்டுக்கு ஒரு முறை ஏலக்கேட்புத் தொகையில் 15சதவீதம் உயர்வு |
| 4 | பேருந்து நிலையத்தில் மேற்குபுறத்தில் மேல் தளத்தில் கட்டப்பட்டுள்ள (11 கடைகள்)கடை ஒன்றுக்கு | 1,00,000/– | 2000/– | ஒப்படைக்கும் நாள் முதல் 9 ஆண்டுகள் வரை (3ஆண்டுக்கு ஒரு முறை ஏலக்கேட்புத் தொகையில் 15சதவீதம் உயர்வு |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 702 /2023/அ2)
**தீர்மான எண் :** 253 – அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளார்(கூ.பொ)
போடிநாயக்கனூர் நகராட்சி